# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 APRIL

மலர்: 8 இதழ்: 7 ஏப்ரல் 2015 விலை: ரூ. 5




## பசுக்களுக்கு இது பட்டினிச் சாவா?

நமது வசனங்களை மறுப்போரை நரகில் கருகச் செய்வோம். அவர்களின் தோல்கள் கருகும் போதெல்லாம் அவர்கள் வேதனையை உணர்வதற்காக வேறு தோல்களை அவர்களுக்கு மாற்றுவோம். அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான். (குர்ஆன் 4:56)



## லெக்கீஸ் (leggies) அணிவதால் ஏற்படும் கேடுகள்




## தோலில் வேதனை உணரும் நரம்புகள்

# வாழ்க்கைப் பரீட்சையில் சோதனைகள் சகஜம்

இவ்வாழ்க்கை என்பது ஓர் பரீட்சை என்பதால் இதில் நோய் உட்பட பல சோதனைகளும் சகஜமாக வந்து செல்லும் என்பதை இறைவனே எடுத்துக் கூறுகிறான்:

**2:155 'நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக!**

அவ்வாறு சோதனைகள் வரும்போது நாம் பதறாமல் பொறுமையை மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கையின் உண்மை நிலையை மனதில் இருத்தி நம்மை நாமே நிதானப் படுத்திக் கொள்ள வேண்டும். இதோ இறைவனே வழிகாட்டுகிறான்:

**2:156–157 '(பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, 'நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்' என்று கூறுவார்கள். இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்.'**

அதாவது நாம் இறைவனுக்கு உரியவர்கள், அவனிடமே திரும்பிச்செல்ல உள்ளவர்கள் என்ற பேருண்மையை நினைவு கூர்ந்து பொறுமை காத்து ஆக வேண்டியவற்றை கவனித்தால் நமக்கு மன நிம்மதியும் ஏற்படும், இழப்பையும் இலாபகரமானதாக மாற்ற முடியும்! .....எப்படி?

இறைத்தூதர் முஹம்மது நபியவர்கள் கூறினார்கள்: "சோதனைக்கு உள்ளான ஒருவர் இறைவன் இட்ட கட்டளைப்படி இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் (நிச்சயமாக நாம் இறைவனுக்கு உரியவர்கள், அவனிடமே திரும்பிச்செல்ல உள்ளவர்கள்) என்று கூறியபின் இறைவா, நான் படும் துன்பத்திற்கு கூலி வழங்குவாயாக, நான் இழந்ததை விட மேலானதைக் கொண்டு இதற்க்கு பகரம் வழங்குவாயாக!" என்று பிரார்த்தித்தால் அவருக்கு இறைவன் மேலானதை வழங்குவான்" (நூல்: முஸ்லிம்)

நோய் வரும்போது பொறுமையைக் கடைப்பிடித்து இறைவனை நினைவுகூர்ந்து துதித்தால் நமது ஆரோக்கியத்தை முன்பிருந்ததைவிட இறைவனே செம்மைப் படுத்துகிறான்!

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்


THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 APRIL

மலர்: 8 இதழ்: 7 ஏப்ரல் 2015 விலை: ரூ. 5


## பொருளடக்கம்


| | |
|---|---|
| தீமைகள் ஒழித்திட ஒரே வழி | 2 |
| தோலில் வேதனை உணரும் நரம்புகள் | 6 |
| தாய்லாந்து பேராசிரியர் சத்தியத்தை ஏற்றல் | 7 |
| லெக்கீஸ் அணிவதால் கேடுகள் | 10 |
| அதிசயக் குழந்தை? | 14 |
| குழந்தைகளோடு பழகுவதில் முன்மாதிரி | 15 |
| இடஒதுக்கீட்டுக்கு இடம் கொடாது இஸ்லாம் | 16 |
| பசுவதைத் தடை சரியா? | 18 |
| எதிரிகளின் குழந்தைகளின் நலன் நாடிய உத்தமர் | 21 |
| குற்றவாளிகள் நாட்டுக்கு அறிவுரை! | 22 |



published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

**ஆசிரியர் உரை**

# தீமைகளை ஒழித்திட ஒரேவழி!

தனி நபர் வாழ்விலும், குடும்ப மற்றும் சமூக வாழ்விலும் தீமைகள் ஒழிக்கப் படவேண்டும் என்ற நாட்டம் நம்மில் எல்லோருக்குமே உண்டு. ஆனால் எவ்வாறு ஒழிப்பது?

கையாள நமக்கு முன் பல வழிகள் இருந்தாலும் அவை எல்லாம் தோல்வியில் முடிவதையும் நாம் கண்டு வருகிறோம்:

● கருத்து சுதந்திரம் என்ற பெயரில் கொடிய பாலியல் குற்றவாளி கூட ஊடகங்கள் மூலம் தன் செயலை நியாயப்படுத்தி பொதுமக்களுக்கு உபதேசம் செய்யும் அவலம் ஒரு புறம்.

● மதுக்கடைகளைத் திறந்து வைத்து விட்டு 'குடி குடியைக் கெடுக்கும்' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி வைத்து அழகு பார்ப்பது ஒரு புறம்.

● பிறரை நன்மை செய்யுமாறு ஆன்மீக உபன்யாசங்களும் உபதேசங்களும் செய்துவிட்டு சுய வாழ்வில் அவற்றுக்கு நேர் விபரீதமாக நடந்து காட்டும் ஆன்மீகத்தலைவர்கள் ஒரு புறம்.

● தீமைகள் என்று எவற்றையெல்லாம் ஒருகாலத்தில் மக்களுக்கு போதிக்கப் பட்டதோ அவற்றை மதங்களின் பெயர் சொல்லியே நியாயப் படுத்தும் போக்கு ஒருபுறம்.

● தெள்ளத்தெளிவான குற்றங்களுக்கும் சமூகத்தீமைகளுக்கும் எதிராக சட்டம் போட்டு அவற்றை ஒழிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாமல் திண்டாடும் அரசுகள் ஒரு புறம்

● மனித உரிமைகள் என்ற பெயரில் விபசாரிகளும் சூதாடிகளும் அவரகள் செய்து வரும் தொழிலுக்கு சட்டபூர்வமான உரிமை கோரும் விந்தை ஒருபுறம்.

● இனம், மொழி, நிறம், மதம் போன்றவற்றைக் காட்டி எப்படிப்பட்ட அநியாயங்களையும் நியாயப் படுத்தி அரசியலாக்கும் போக்கு ஒருபுறம்!

இப்படிப்பட்ட குழப்பங்களுக்கும் சமூகத்தில் தீமைகள் கட்டுக்கடங்காமல் பெருகி வருவதற்கும் என்ன காரணம்?

பல காரணங்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை சிலவற்றைக் காண்போம். அவற்றுக்கு திருக்குர்ஆனும் நபிவழிகளும் வழங்கும் தீர்வுகளையும் காண்போம்.

## இறை உணர்வும் மறுமை உணர்வும் இல்லாமை

மனித மனங்களில் பாவங்களைப் பற்றிய குற்ற உணர்வு இல்லாமை ஒரு முக்கிய காரணம் ஆகும். ஓரளவு மக்கள் மனங்களில் அந்த உணர்வு இருந்தாலும் அவற்றை அறவே மழுங்கடிக்கச் செய்கின்றன மதத்தின் பெயரால் பரப்பப்படும் சில மூட நம்பிக்கைகள். உயிரும் உணர்வும் அற்ற

பொருட்களைக் காட்டி அவற்றையெல்லாம் கடவுள் என்று கற்பிப்பதால் உண்மையான கடவுள் பயமே மக்கள் மனங்களில் இருந்து மறைந்து விடுகிறது. அதன் விளைவாக தட்டிக்கேட்க யாருமில்லை என்ற உணர்வு மேலோங்குவதால் எப்பாவம் செய்யவும் மனிதன் சிறிதும் தயங்குவதில்லை.

ஆனால் சத்திய இறைமார்க்கம் படைத்தவன் மட்டுமே இறைவன், அவனை மட்டுமே வழிபட வேண்டும் என்ற தெளிவான கடவுள் கொள்கையையும் மறுமை சிந்தனையையும் கற்பிக்கிறது. இவ்வுலகம் ஒருநாள் அழிக்கப்படும். மீணடும் அனைவரும் உயிர்பிக்கப் பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்படுவர். அன்று புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் விதிக்கப்படும் என்கிறது. இந்த அடிப்படை உண்மைகளை மனித மனங்களில் விதைத்து மனிதனை தீமைகளில் இருந்து தடுத்து நன்மைகளைச் செய்ய நாட்டம் கொள்ள வைக்கிறது இறைமார்க்கம்.

## நன்மை எது தீமை எது என்று பிரித்தறியாமை

அடுத்த காரணம் எது நன்மை எது தீமை என்று மனிதன் தீர்மானிக்க முடியாமல் குழம்பி நிற்பது. - சந்தர்பங்களுக்கு ஏற்றவாறு நன்மை- தீமைகளை தன்னிச்சையாகத் தீர்மானிப்பது. இக்குழப்பம் தீரவேண்டுமானால் மனிதன் ஒரு முக்கியமான ஓர் உண்மையை விளங்கி ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வருபவனே இவ்வுலகின் எஜமானன். மனிதனுக்கும் சமூகத்துக்கும் நன்மை பயப்பது எது தீமை பயப்பது எது என்பதைப் பற்றிய முழுமையான அறிவு அவனிடம் மட்டுமே உள்ளது. அது மட்டுமல்ல அவன்தான் நம்மை இறுதித்தீர்ப்பு நாளின் போது விசாரிக்கப் போகிறவன் இக்காரணங்களால் அவன் எதை நம்மிடம் செய் என்று சொல்கிறானோ அதுவே நன்மை அல்லது புண்ணியம். எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் அல்லது தீமை என்ற தெளிவான உண்மையை ஒப்புக்கொண்டால் இக்குழப்பம் ஏற்படாது. ஆம், நன்மை தீமைகள் எவை என்றறிய இறைவனின் வேதத்தையே அணுகவேண்டும்.

28:70. மேலும்: அவனே அல்லாஹ்! அவனை அன்றி (வேறு) நாயன் இல்லை. இம்மையிலும், மறுமையிலும் எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. தீர்ப்பு கூறும் அதிகாரமும் அவனுக்கே உரியது. ஆதலின் அவனிடத்திலேயே நீங்கள் திரும்பிக் கொண்டு வரப்படுவீர்கள்

4:105.(நபியே!) அல்லாஹ் உமக்கு அறிவித்ததைக் கொண்டு, நீர் மனிதர்களிடையே தீர்ப்பு வழங்குவதற்காக, முற்றிலும் உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நிச்சயமாக நாம் உம்மீது இறக்கியுள்ளோம். எனவே சதி மோசக்காரர்கள் சார்பில் வாதாடுபவராகி விடாதீர்.

## பாவங்களை வியாபாரமாக்கும் ஆன்மிகம்

தீமைகள் சமூகத்தில் கட்டுக்கடங்காமல் பெருக அடுத்த காரணம், மதத்தின் பெயராலேயே பாவம் செய்வோருக்கு மேலும் பாவம் செய்ய உரிமம் வழங்குவது. இன்ன இறைத்தூதரை அவரே இரட்சகர் என்று விசுவாசியுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். அல்லது இன்ன நதியில் முழுகி எழுங்கள், அல்லது இன்ன பரிகாரங்கள் செய்யுங்கள், அல்லது இன்னதை இவ்வழிபாட்டுத்தலத்திற்கு காணிக்கையாக செலுத்துங்கள் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும், இவ்வாறெல்லாம் இறைவன் சொல்லாதவற்றையும் அங்கீகரிக்காதவற்றையும் மக்களிடையே பிரச்சாரம் செய்யப் படுவதால் பாவம் செய்து முடித்தவர்கள் அடுத்த பாவத்துக்கு தயாராகிவிடும் நிலை ஏற்படுகிறது.

ஆனால் சத்திய இறைமார்க்கம் பாவ மன்னிப்பு என்பது இறைவனிடம் நேரடியாக முறையிட்டு பெறுவதன் மூலமும் மீண்டும் அப்பாவத்திற்குத் திரும்பாமல் இருப்பதன் மூலமும் மட்டுமே என தெளிவுபடச் சொல்கிறது. இது அல்லாமல் மற்ற குறுக்கு வழிகள் அனைத்துமே பொய் என்றுரைக்கிறது.

## மனிதகுல ஒற்றுமையை மறந்து போதல்

அடுத்ததாக, இனத்தின், மொழியின், நிறத்தின் மற்றும் மதத்தின் பெயரால் நடைபெறும் அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் முக்கியக் காரணம் நாம் அனைவரும் மனிதர்களே, - ஒரு ஆண் ஒரு பெண்ணிலிருந்து உருவாகிப் பல்கிப் பெருகியவர்களே - என்ற உண்மையை மறந்து போவதே. ஆனால் சத்திய மார்க்கம் எப்போதும் ஒன்றே மனித குலம், ஒருவனே இறைவன், அவன் நம்மை கண்காணிக்கிறான் மறுமையில் விசாரிப்பான் என்ற உண்மைகளை ஆணித்தரமாக வலியுறுத்தி வருகிறது.

***49:13* மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்.**

இந்த உண்மை மக்களிடம் வேரூன்றும்போது இனவெறி, தீண்டாமை, மொழிவெறி, நிறவெறி போன்றவை மறைந்து பிறமனிதர்களைத் தமது சகோதரர்களாகக் காணும் இயல்பு மலரும். இன்றும் நீங்கள் இந்த சத்திய மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட மக்களிடையே மேற்படி வேறுபாடுகளுக்கு யாரும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதையும் அவர்களிடையே எந்த சமூகத்திலும் காணாத சமத்துவமும் சகோதரத்துவமும் கோலோச்சுவதையும் காண்கிறீர்கள்.

## நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும்

அடுத்ததாக நன்மையை எவுவதோடு தீமைகளைத் தடுப்பதையும்

விசுவாசிகளுக்குக் கடமையக்குகிறது சத்திய மார்க்கம் . தனிநபர் வாழ்வில் துன்புறுத்தலுக்கு ஆளானால் பொறுமையை மேற்கொள்ளக் கற்பிக்கும் அதேவேளையில் தீமைகளுக்கு எதிராகப் போராடக் கற்பிக்கிறது இறைவனின் மார்க்கம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் எவரேனும் ஒரு தீமையைக் கண்டால் கைகளால் தடுங்கள். அது உங்களால் முடியாவிட்டால் நாவினால் தடுங்கள். அதுவும் முடியாவிட்டால் உங்கள் மனதினால் அதைத் தீமை என்று வெறுத்தொதுக்குங்கள். அது இறைநம்பிக்கையின் கடைசி நிலை ஆகம்."

## மிக பலவீனமான தொலைநோக்கு இல்லாத சட்டங்கள்

● பலவீனமானவையும் சிறிதும் தொலை நோக்கில்லாதவையும் ஆன சட்டங்கள் நடைமுறையில் இருப்பதன் காரணமாக விபச்சாரம், மது, சூதாட்டம், ஓரினச்சேர்க்கை போன்ற சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் கொடிய குற்றங்கள் கூட சட்ட அங்கீகாரத்தோடு நடைபெறவும் நாளுக்கு நாள் பெருகவும் செய்கின்றன. இவற்றைத் தொடர்ந்து திருட்டும் கொள்ளையும் கற்பழிப்புகளும் கூட எதிர்காலத்தில் சட்ட அங்கீகாரம் பெறக்கூடிய அபாயமும் நாட்டில் உள்ளது.

இறைவன் தரும் அளவுகோலை அடிப்படையாகக்கொண்டு வகுக்கப்பட்ட வரையறைகளும் சட்டங்களும் நமது தனிப்பட்ட வாழ்வையும், குடும்ப வாழ்வையும் வாழ்வின் எல்லாத் துறைகளையும் ஒழுங்குபடுத்தும். வணக்கங்கள், தனிநபர் நடத்தை, ஒழுக்கம், பழக்க வழக்கம், நடையுடை பாவனை, குடும்ப வாழ்வு, உண்ணுதல், பருகுதல், சமூகத் தொடர்புகள், பொருளாதார நடைமுறைகள், குடிமக்களின் உரிமைகள், நீதித்துறை, அரசியல் என எல்லாத் துறைகளுக்கும் நெறிமுறைகளை வகுத்துத் தருகின்றன

# சிறந்த தலைமுறைகளை உருவாக...

நபி(ஸல்) அவர்கள் குழந்தையின் உருவாக்கம் ஷைத்தானியத்திலிருந்து உருவாகாமல், ஆன்மிகத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று வழிகாட்டினார்கள்.

"உங்களில் ஒருவர் தன் மனைவியிடம் தாம்பத்தியத்திற்காகச் சென்றால்

*'பிஸ்மில்லாஹ்! ஜன்னிப்னஷ் ஷைத்தான வஜன்னிபிஷ் ஷைத்தான மா ரஸக்தனா'*

(பொருள்:- எம்மை விட்டும், எமது (இந்த உறவின் மூலம்) எமக்கு நீ வழங்கும் குழந்தையை விட்டும் ஷைத்தானைத் தூரப்படுத்துவாயாக!') என்று ஓதினால் அவர்களுக்குக் கிடைக்கும் குழந்தையை ஷைத்தான் அடைய மாட்டான்" என்று கூறினார்கள்.

# தோலில் வேதனைகளை உணரக் கூடிய நரம்புகள் (pain receptors)

மறுமை நாள் எனும் நியாயத் தீர்ப்பு நாளில் தீயவர்கள் நரக நெருப்பினால் வேதனை செய்யப்படுவார்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இதைக் கூறும் போது நரகவாசிகளின் தோல்கள் கருகும் போது உடனே வேறு தோலை மாற்றுவோம் என்று இறைவன் கூறுகிறான்:


**நமது வசனங்களை மறுப்போரை நரகில் கருகச் செய்வோம். அவர்களின் தோல்கள் கருகும் போதெல்லாம் அவர்கள் வேதனையை உணர்வதற்காக வேறு தோல்களை அவர்களுக்கு மாற்றுவோம். அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:56)**

வேதனைகளை உணரக் கூடிய நரம்புகள் மனிதனின் தோலில் தான் உள்ளன. தோல் கரிந்து விட்டால் எந்த வேதனையையும் மூளை உணராது என்பது சமீபத்திய கண்டு பிடிப்பு.

இதனால் தான் மேல் தோலை மட்டும் மரத்துப் போகச் செய்யும் ஊசிகளைப் போட்டு அறுவை சிகிச்சை செய்கின்றனர். முழு உடலையும் மரத்துப் போகச் செய்வதில்லை. அவ்வாறு மரத்துப் போகச் செய்தால்மனிதன் செத்து விடுவான்.

அது போல் தீக்காயத்தில் தோல் கருகிப் போனவர்கள் வேதனையால் துடிக்காமல் இருப்பதையும் காண்கிறோம். பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த முஹம்மது நபிக்கு இது எப்படித் தெரியும்?

‘‘அவர்களின் தோல் கருகும் போது அதை மாற்றுவோம்‘‘ என்று கூறாமல் ‘‘வேதனையை அவர்கள் உணர்வதற்காகவே மாற்றுவோம்‘‘ என்று 14 நூற்றாண்டுகளுக்கு முன்னால் கூறுவதென்றால் மனிதனைப் படைத்த இறைவனால் தான் சாத்தியமாகும்




திருக்குர்ஆன் இறைவனின் வேதம் என்பதற்கு இதுவும் வலுவான சான்றாக அமைந்துள்ளது.

# தாய்லாந்து பேராசிரியர் சத்தியத்தை ஏற்ற வரலாறு

இஸ்லாமிய ஆய்வாளர் சேக் அப்துல்மஜீது ஜின்தானி அவர்கள் கூறுகிறார்கள்:

டாக்டர் தாகாதத் தெஜாஸன் (Professor Tejatat Tejasen)

இந்த மனிதர் எட்டாவது சவூதி மருத்துவ மாநாட்டில் கலந்து கொண்டார். தாய்லாந்திலுள்ள சியாங்க் மாய் பல்கலைக்கழகத்தின் உடல் இயங்கியல் துறையின் தலைவர். (Chairman of the Department of Anatomy at Chiang Mai University in Thailand) அதே பல்கலைக்கழகத்தில் முன்பு அவர் Dean of the Faculty of the Medicine ஆக இருந்தார்.

உடல் இயங்கியல் துறையில் அவர் நிபுணத்துவம் பெற்ற பிரிவு சம்பந்தமான திருக்குர்ஆன் வசனங்களையும் நபிமழிகளையும் நாம் பேராசிரியர் தெஜஸான் அவர்கள் முன் வைத்தோம். கரு வளர்ச்சி பற்றிய படிநிலைகள் குறித்து புத்த வேதங்களிலும் மிகவும் துல்லியமான விபரங்கள் இருப்பதாக அவர் பதிலளித்தார். அப்படியாயின் அந்த விபரங்களை காணவும் அது பற்றி படிக்கவும் நாம் மிகவும் ஆர்வமும் ஆவலும் கொண்டிருப்பதாக அவரிடம் கூறினோம்.

ஒரு வருடம் கழித்து பேராசிரியர் தெஜஸான் அவர்கள் வெளிப்புற ஆய்வாளராக மன்னர் அப்துல்அஜீஸ் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தார். அவர் ஒரு ஆண்டிற்கு முன்பு சொன்னதை அவருக்கு ஞாபகப்படுத்தினோம். நான் சொன்னது போன்று அதில் இல்லை. உறுதி செய்து கொள்ளாமல் சொல்லி விட்டேன் என்று வருத்தப்பட்டார். அவர் புத்த வேதங்களை ஆராய்ந்து பார்த்த போது இது சம்பந்தமான எதுவும் அதில் இல்லை என்பதை அவர் கண்டு கொண்டார்.

இதற்குப்பிறகு, திருக்குர்ஆனும் நபி மொழியும் எவ்விதம் நவீன கருவியலுடன் ஒத்துப் போகின்றது என்பது பற்றி பேராசிரியர் கீத் மூர் ( Prof. Kieth Moore) அவர்களின் ஒரு சொற்பொழிவை அவருக்கு வழங்கினோம். பேராசிரியர் மூர் அவர்களை உங்களுக்குத் தெரியுமா என்று அவரிடம் கேட்ட போது அவரை நன்றாகத் தெரியும் மேலும் அவர் இந்தத் துறையில் உலகிலேயே மிகவும் புகழ் பெற்ற அறிவியலாளர் என்று பதிலளித்தார்.

அந்த சொற்பொழிவை பேராசிரியர் தெஜஸான் அவர்கள் கேட்டபின் மிகவும் வியப்பிற்குள்ளானார். சருமவியல் சம்பந்தமான நவீன கண்டுபிடிப்புக்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளில் ஒன்று தோலின் உணர்வுத் தன்மையாகும்.

டாக்டர் தாஜெஸான் அவர்களிடம் 1400 அண்டுகளுக்கு முன்பு அருளப்பட்ட புனிதத் திருமறையான குர்ஆனில் இருந்து நரக நெருப்பால் நிராகரிப்பவர்கள் தண்டிக்கப்படும் போது அவர்களின் நிலை பற்றிய

வசனம் எடுத்துக் காட்டப்பட்டது. அந்த வசனம் பின்வருமாறு:-

**யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம் அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லா (வேறு) தோல்களை, அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென, அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் – நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:56)**

தோலில் முடியும் வலி உணரும் நரம்பின் முக்கியத்துவம் பற்றி 1400 ஆண்டுகளுக்கு முந்தைய இந்த குறிப்பு சரியென்று தாங்கள் ஒப்புக் கொள்கின்றீர்களா என்று அவரிடன் கேட்கப்பட்ட போது: ஆம், இது உண்மை. என்று டாக்டர் தெஜஸன் அவர்கள் பதிலளித்தார்கள்.

நரகத்தில் குற்றவாளிகள் தோலை எரிப்பதன் மூலம் தண்டிக்கப்படுகின்றனர். அவர்கள் வேதனையை மீண்டும் உணரும் பொருட்டு அல்லாஹ் அவருக்கு புதிய தோலை உண்டாக்குகின்றான். இவ்வாறு வலி உணர்ச்சி உள்வாங்கி ' ியயை சநஉநிவழசள) தோலில்தான் இருக்கின்றது என்பது இவ்வசனம் உட்கொண்டிருக்கும் உண்மையாகும்.

காயங்களை உணரும் மையமாக தோல் செயல்படுகின்றது. அது முழுமையாக எரிக்கப்பட்டு விட்டால் அந்த உணரும் தன்மையை அது இழந்து விடுகின்றது. இதன் காரணமாகத்தான் தோலை ஒவ்வொரு முறையும் மாற்றி மாற்றி நிராகரிப்பவர்கள் தொடர்ந்து வேதனையை அனுபவிக்கும் வண்ணம் நரக தண்டனை அமைந்துள்ளதை இவ்வசனங்கள் குறிப்பிடுகின்றன.

தொடர்ந்து இந்த வசனங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எந்தவொரு மனிதரிடமிருந்தாவது வந்திருக்க முடியுமா என்று நாம் அவரிடம் கேட்டோம். அவைகள் ஒரு போதும் எந்த மனித மூலத்திலிருந்தும் வந்திருக்க சாத்தியமில்லை என்று பேராசிரியர் தெஜஸான் அவர்கள் ஒப்புக் கொண்டார்.

தொடர்ந்து நடந்த உரையாடல்களில் இப்பிரபஞ்சத்தின் படைப்பாளனின் வார்த்தைகளே இந்த குர்ஆன் என்பதை படிப்படியாக உணர்ந்து கொண்டார்.

## சத்திய மார்க்கத்தை ஏற்றல்:

பேராசிரியர் தெஜாஸன் தம் நாடு திரும்பி இந்த புதிய ஞானத்தையும்-கண்டுபிடிப்புகளைப் பற்றிய பல விரிவுரைகள் நிகழ்த்தினார். இந்த விரிவுரைகளின் பயனாக அவரது மானவர்களில் ஐந்து பேர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக நாம் அறிந்தோம்.

பின் ரியாத்தில் நடந்த எட்டாவது சவுதி மருத்துவ மாநாட்டில் குர்ஆன் மற்றும் நபிவழிகளில் உள்ள மருத்துவ அறிவியல் பற்றிய விரிவுரைகளில் தொடர்ச்சியாக பங்கேற்றார். பேராசிரியர 'தெஜாஸன் நான்கு நாட்கள் முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத பல அறிஞர்களிடம் குர்ஆன்-ஹதீஸ்களில் உள்ள இந்த உண்மைகளைப் பற்றி கலந்து ஆலோசிப்பதில் கழித்தார்.

அந்த மாநாட்டின் இறுதிப் பகுதியில் பேராசிரியர் எழுந்து பேசலானார்: 'கடந்த மூன்றாண்டுகளாக ஷேக் அப்துல் மஜீத் அல் ஜிந்தானி அவர்களால் தரப்பட்ட குர்ஆனில் நான் ஈடுபாடலானேன். கடந்த வருடம் நான் பேராசிரியர் கீத் மூரே அவர்களின் புதிய ஆய்வுகளை ஷேக் மூலம் பெற்றேன். அவர்கள் இதனை தாய்லாந்து மொழியில் மொழிபெயர்த்து தாய்லாந்து முஸ்லிம்களிடையே உரையாற்றக் கூறினார்கள். அவர்களது வேண்டுகோளை நான் நிரைவேற்றினேன். நான் ஷேக்கிடம் கொடுத்த வீடியோ கேசட்டில் நீங்கள் அதனைப் பார்க்கலாம். இந்த மாநாட்டு மூலமும் எனது ஆராய்ச்சிகளினாலும் நான் நம்புவது என்னவென்றால்- 1400 ஆண்டுகளுக்கு முன்பே குர்ஆனிலே பதியப்பட்டுள்ளது அனைத்துமே உண்மை என்பதையும் அவைகளை அறிவியல் மூலம் நிரூபிக்கலாம் என்பதாகும்.

படைப்பதற்கு தகுதியான இறைவன் மூலம் பெற்ற இந்தச் செய்தியை தெரிவித்த முஹம்மது நபி அவர்கள் படிக்கவோ- எழுதவோ தெரியாதவர். எனவே நிச்சயமாக அவர் இறைவனின் தூதராவார்கள். எனவே நான் 'லாயிலாஹ இல்லல்லாஹ்.." அதாவது வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை- 'முஹம்மது ரசூலுல்லாஹ்" முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராவரார்கள்" என்பதை கூற இதுவே சரியான நேரம் என்பதை உணர்கிறேன். நான் இந்த மாநாட்டின் மூலம் அறிவியல் உண்மைகளை மட்டுமல்லாது மேலும் பல அறிஞர்களிடையே கலந்துரையாடி பல அறிஞர்களின் நட்பு கிடைத்தது. இந்த மாநாட்டிற்கு வருகை தந்ததன் மூலம் நான் அடைந்த மதிப்பிட முடியாத ஒரு பலன் என்னவென்றால் 'லாயிலாஹ இல்லல்லாஹ் முகம்மது ரசூலுல்லாஹ்" என்னும உறுதிமொழியைக் கூறி நான் ஒரு முஸ்லிமானதுதான்.

எவர்களுக்குக் கல்வி ஞானம் அளிக்கப்பட்டுள்ளதோ அவர்கள் உமக்கு உம்முடைய – இறைவனிடமிருந்து அருளப்பெற்ற (இவ்வேதத்)தை உண்மை என்பதையும் அது வல்லமை மிக்க புகழுக்குரியவ(னான நாய)னின் நேர்வழியில் சேர்க்கிறது என்பதையும் காண்கிறார்கள். (திருக்குர்ஆன் *34:6*)

# லெக்கீஸ் (leggies) அணிவதால் ஏற்படும் கேடுகள்

இன்று டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், போன்ற பெருநகரங்களில் வாழும் பெண்களால் அதிகமாக அணியப்படும் ஆடை லெக்கீஸ். தோலோடு ஒட்டிய, கால்களின் பரிமாணங்களை வெளிப்படுத்தும் படியான காலாடை அது. நாளுக்குநாள் அதிகரித்து வரும் "நாகரீக" வளர்ச்சியில் இதை அணியாதிருப்பது பிற்போக்குத் தனம் என்று பெருவாரியான பெண்கள் கருதும் அளவுக்கு இது பிரபலமடைந்து வருகிறது.

சிலர் இதை எதிர் பாலினத்தை கவருவதற்காக அணிகிறார்கள். சிலர் இது அணிவதற்கு எளிமையானது என்பதற்காகவும் விலை குறைவானது என்பதற்காகவும் அணிகின்றனர். இன்னும் சிலர் கல்லூரிகளில் அல்லது அலுவலகங்களில் தனது தோழிகளுக்கு நானும் நாகரீகத்தில் சளைத்தவளல்ல என்பதை காட்டுவதற்காகவும் அணிகின்றனர். பிற்போக்குத்தனம், பத்தாம்பசலித்தனம் போன்ற முத்திரைகளுக்கு பயந்து இதை அணிவோரும் உள்ளனர்.

சரி, இதை அணிவதால் கேடுகள் ஏதாவது உள்ளனவா?

- இதை அணிவதால் இதை அணிபவர்களுக்கு உடல்நலம் தொடர்பான கேடுகள் ஏதும் பெரிய அளவில் உண்டாகப் போவதில்லை. துணிகளின் தரத்தைப் பொறுத்து தோல் அரிப்பு அலர்ஜி போன்ற பாதிப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை எளிய மருத்துவம் மூலம் போக்கிக்கொள்ள முடியும்.

வேறு ஏதாவது கேடுகள்...?

- இந்த உடை ஆண்களை எளிதில் கவரக்கூடியதாக இருப்பதால் அவர்களுக்குள் பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடும். அதன் காரணமாக அவர்கள் வாய்ப்பு வரும்போது அணிபவர்களை
பாலியல் துன்புறுத்தலுக்கு ஆட்படுத்தக் கூடும். முற்றிய நிலையில் பாலியல் பலாத்காரத்திற்கும் அதைத் தொடர்ந்து கொலைக்கும் ஆட்படுத்த வாய்ப்புகள் உண்டு. அந்நியன் ஒருவனின் குழந்தையை கருவுறவும் பெற்றெடுக்கவும் வாய்ப்புகள் உண்டு!

இந்தக் கெடுதியில் இருந்து தப்ப வழிகள் உள்ளனவா?

ஒருசில வழிகளை சில "முற்போக்கு" சிந்தனையாளர்களும் பெண்ணுரிமைவாதிகளும் முன்வைக்கிறார்கள். அவையாவன:

- கராத்தே, குங்ஃபூ போன்ற தற்காப்புக் கலைகளைக் கற்றுக்கொள்ளலாம்.
- எதிரிகளை அண்ணன் - தங்கை உறவை நினைவூட்டி உபதேசித்து

திருத்தப் பார்க்கலாம்

- காவல்துறைக்கு முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்கலாம்.
- "ஆடை அணிவது எங்கள் உரிமை! திருந்தவேண்டியது நீங்கள்" என்று ஆணினத்துக்கு அறிவுரை வழங்கலாம். போராட்டங்கள், ஊர்வலங்கள் மூலம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.
- கற்பம் தரித்தால் கருக்கொலை, சிசுக்கொலை போன்றவற்றை நாடலாம். மீறி குழந்தை பிறந்தால் அரசுத் தொட்டில்களிலும் அனாதைக் காப்பகங்களிலும் அடைக்கலம் நாடலாம்!

வேறு ஏதாவது கேடுகள் உண்டா?

ஆம் கண்டிப்பாக உண்டு! அவை இவற்றை விடக் கடினமானவை! இவ்வுலக வாழ்வில் எப்படியும் வாழலாம், நாம் உயிர்வாழும் வரை எப்படியாவது வாழ்ந்து ஆபத்துகளை விட்டு தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பவர்களுக்கு மேற்கண்ட கேடுகள் மட்டுமே பெரிதாகத் தெரியும். அவர்களைப் பொறுத்தவரை இவ்வுலக வாழ்வு என்பது தற்காலிகமானது, இங்கு மனிதன் செய்யும் செயல்களுக்கு - நல்லதும் தீயதும் ஆன செயல்பாடுகளுக்கு இவ்வுலகைத் தவிர வேறெங்கும் எந்தவிதமான பாதிப்புகளும் விளைவுகளும் தொடர்வதில்லை என்பது அவர்களின் நம்பிக்கை. ஆனால் நம்பிக்கைகளோ ஊகங்களோ முழுமையாக உண்மையாகிவிடாது.

இம்மாபெரும் பிரபஞ்சத்தில் தன் அற்ப நிலையையும் தான் வாழ்ந்து போகும் அற்ப கால அளவையும் உணர்ந்த மனிதர்கள் யாரும் இவ்வுலகமே எல்லாம் இதை மிஞ்சிய ஒன்று எதுவுமே இல்லை என்று தம்பட்டம் அடிக்கமாட்டார்கள். ஒரு கிணற்றுக்குள் நீந்திக் களித்துக் கொண்டிருக்கும் தவளைகள் இக்கிணறுதான் எல்லாமே, இதை மிஞ்சிய ஒன்று எங்கும் எதுவும் இல்லை என்று பிதற்றுவது போன்றதே அது. உண்மையான பகுத்தறிவு கொண்டு சிந்திக்கும் எவரும் இறைவேதங்களும் இறைத்தூதர்களும் கூறும் மறுமை வாழ்வை மறுக்க மாட்டார்கள்.

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்துவரும் இறைவன் இங்கு ஒவ்வொரு மனிதனும் செய்த வினைகள் அனைத்துக்கும் மறுமையில் தீர்ப்பு வழங்குவான். இறைவன் தடுத்த காரியங்களை செய்தவர்கள் அதற்கான தண்டனையை அனுபவிப்பார்கள். உதாரணமாக, உடை விஷயத்தில் இறைவன் விதித்த வரம்புகளை மீறியவர்களும், இறைவன் தடுத்த ஆண்-பெண் உறவு வரம்புகளை மீறியவர்களும், அவ்வாறு பிறந்த குழந்தைகளைக் கொன்றவர்களும் என அனைவருக்கும் நரக நெருப்பின் தண்டனை அங்கு

உண்டு.

இவ்வுலகின் சொந்தக்காரனான இறைவன் சமூக நலன் மற்றும் சமூகத்தின் பாதுகாப்பு கருதி இங்கு இப்படித்தான் வாழவேண்டும் என்று தனது வரையறைகளை வேதங்கள் மூலமாகவும் தூதர்கள் மூலமாகவும் அவ்வப்போது அறிவித்துள்ளான். அந்த வரிசையில் இறுதியாக வந்த நபிகள் நாயகம் அவர்களின் மொழிகளும் அவர் மூலமாக அனுப்பப்பட்ட திருக்குர்ஆனும் ஆடை மற்றும் அந்நிய ஆண்- பெண் உறவின் வரையறைகளை அறிவிக்கின்றன. அதன்படி

- ஆண்களுக்கு தொப்புள் முதல் முழங்கால் வரையிலான உடலின் பாகங்கள் மறைக்கப்பட வேண்டியவையாகும்.
- பெண்களைப் பொறுத்தவரை முகம் மற்றும் முன்கை தவிர மற்ற எல்லா பகுதிகளையும் மறைத்துக் கொள்ள வேண்டும்.
- உடலின் பாகங்களை வெளிப்படுத்தும் விதமான மெல்லிய ஆடைகளும் இறுக்கமான ஆடைகளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தடை செய்யப்பட்டு உள்ளன.
- பெண்ணைப் பொறுத்தவரை அவளது நெருங்கிய உறவினர் அல்லாத மற்ற ஆண்களுக்கு முன்னர் வரும்போது மேற்படி உடலை முழுமையாக மறைத்துக் கொண்டே வரவேண்டும்
- தாம்பத்தியம் அல்லது உடலுறவு என்பதை திருமணமான ஆணுக்கும் பெண்ணுக்கும் அதாவது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே மட்டுமே அனுமதிக்கப் பட்டுள்ளது.
- ஒரு அந்நிய ஆணும் அந்நிய பெண்ணும் தனிமையில் சந்திப்பதோ பேசுவதோ அல்லது உறவாடுவதோ தடை செய்யப்பட்ட.ஒன்றாகும்.
- ஒரு அந்நிய ஆணும் அன்னியப் பெண்ணும் உடலுறவு கொள்வது இவ்வுலகிலேயே தண்டனைக்குரிய பாவம்.

ஆக, அந்த வகையில் லெக்கீஸ் மட்டுமல்ல மறைக்க வேண்டிய உடலின் பாகங்களை திறந்தோ மூடியோ வெளிப்படுத்தும் எந்த உடையும் இறைவனால் தடைசெய்யப்பட்ட ஒன்றாகும். இதை அணிவதால் சமூகத்தில் உண்டாகும் குழப்பங்களுக்கும் விளைவுகளுக்கும் உரிய தண்டனையை இதை அணிபவர்கள் மறுமையில் பெறுவார்கள் என்பது நிச்சயம்!

இந்த வரம்புகளை மீறி விட்டு அதன் பாதிப்புகளைத் துடைத்து எறிந்துவிட்டு ஒன்றுமே நடவாத மாதிரி நீங்கள் நடந்து கொள்ளலாம். ஆனால் அவை அனைத்துமே இறைவனால் ஆங்காங்கே பதிவு செய்யப்படுகின்றன. உங்கள் மூளையிலும் அதன் பதிவைக் காணலாம்! இந்தப் பதிவுகள் அனைத்தும் இறுதித் தீர்ப்புநாள் அன்று உங்களுக்கு எதிரான சாட்சிகளாக நிற்கும்.

***36:65.*** *அந்த நாளில் நாம் அவர்களின் வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம் அன்றியும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தது பற்றி அவர்களுடைய கைகள்*

நம்மிடம் பேசும் அவர்களுடைய கால்களும் சாட்சி சொல்லும்.
*99:7,8..* எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.
விசாரணைக்குப் பிறகு பாவிகளுக்கு நரகமும் புண்ணியவான்களுக்கு சொர்க்கமும் விதிக்கப்படும். அதுதான் மனிதனின் நிரந்தரமான அழியாத இருப்பிடம் ஆகும்.
அந்த நரகம் எப்படிப்பட்டது என்பதை விளங்க திருக்குஆனைப் படியுங்கள். பல்வேறு இடங்களில் அதுபற்றி திருக்குர்ஆனில் இறைவன் குறிப்பிடுகிறான் உதாரணத்திற்கு கீழ்கண்ட வசனகளைப் படியுங்கள்.
*78:21–30.* நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது, வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும்.
*18:29* .....அநியாயக் காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம்; (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்; அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும். மிகக் கேடான பானமாகும் அது! இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும்.
எந்த உடலைக் கவர்ச்சியாகக் காட்டிகொண்டு நடந்தீர்களோ அதன் கதி நாளை இதுதான்! இது நூறு சதவீத உண்மை! இது வேண்டுமா? சிந்தியுங்கள்! இன்றே திருந்தி உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்பு கோருங்கள்! உங்கள் ஆடையையும் வாழ்க்கையையும் திருத்திக்கொள்ளுங்கள்!
அதேவேளையில் இறைவனுக்குப் பொருத்தமான வாழ்வை வாழ்ந்து செல்வோருக்கு மறுமையில் சொர்க்கச் சோலைகளும் காத்திருக்கின்றன.

## குழந்தைகளோடு குதூகலித்த நபிகளார்

ஜஃபர்(ரழி) அவர்களது மகன் அப்துல்லாஹ் கூறுகின்றார் நபி(ஸல்) அவர்கள் பயணத்திலிருந்து வரும் போது அவர்களது குடும்பத்துச் சிறுவர்கள் அவர்களை வரவேற்கச் செல்வார்கள். ஒரு முறை அவர்கள் ஒரு பயணத்திலிருந்து வந்தார்கள். நான் அவர்களை முந்திச் சென்று சந்தித்தேன். என்னை நபியவர்கள் சுமந்து அவர்களது ஒட்டகத்தின் முன்னால் வைத்துக் கொண்டார்கள். அதன் பின் அவர்களது பேரன்களான ஹஸன் அல்லது ஹுஸைன் அவர்கள் வந்தார்கள். அவர்களை நபியவர்கள் தமக்குப் பின்னால் வைத்துக் கொண்டார்கள். எங்கள் மூவரையும் சுமந்துகொண்டு நபியவர்களது ஒட்டகம் மதீனாவுக்குள் நுழைந்தது.

**இன்றைய செய்திகளும் இஸ்லாத்தின் நிலைப்பாடும்**

# அதிசய குழந்தை

மாலைமலர் செய்தி பிப்ரவரி 27,2015

கோவை செல்வபுரம் ரங்கசாமிகாலனியை சேர்ந்தவர் அகமதுநசீர் - தஸ்லிமா தம்பதியினருக்கு செல்வபுரத்தில் உள்ள மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனையில் அழகிய ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையின் 2 காது மடல்களிலும் 'அல்லாஹ்' என்ற அரபு எழுத்து வடிவம் போன்று இருந்தது. இதை பார்த்த தந்தை அகமதுநசீரும், தாய் தஸ்லிமாவும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் இந்த தகவல் பரவியதால் நேரம் செல்லச்செல்ல ஆஸ்பத்திரியில் கூட்டம் அதிகரித்தது. இதைத்தொடர்ந்து செல்வபுரம் போலீசார் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். சுகப்பிரசவம் என்பதால் தாயும், குழந்தையும் மருத்துவமனையில் இருந்து ரங்கசாமி காலனியில் உள்ள வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பொதுமக்கள் உள்பட பலரும் அகமதுநசீரின் வீட்டுக்கும் சென்று குழந்தையை பார்த்துச்செல்கிறார்கள்.

## இஸ்லாமிய நிலைப்பாடு :

இறைவனின் அத்தாட்சிகளை தற்செயலான நிகழ்வுகளில் தேடாதீர்கள். இந்தக் குழந்தை என்பதே எவ்வளவு பெரிய அற்புதம்? அக்குழந்தை உருவான விதம், அது தன்னுள் தாங்கி நிற்கும் ஏராளமான பொறிகள், இயந்திரங்கள், கேமராக்கள், ஒலிவாங்கிகள், தொழிற்சாலைகள், உபகரணங்கள்... அவற்றின் குறையில்லாத இயக்கம் அப்பப்பா... இவையெல்லாம் மக்களுக்கு அதிசயங்களாகப் படவில்லையா? இவையெல்லாம் நாம் ஒவ்வொருவருக்கு உள்ளும் இருக்கின்றன என்பதுதானே உண்மை?

இதோ திருக்குர்ஆனில் இறைவன் கேட்கிறான்:

**56:57. நாமே உங்களைப் படைத்தோம். எனவே, (நாம் கூறுவதை) நீங்கள் உண்மையென்று நம்ப வேண்டாமா?**

**56:58. (கர்ப்பப் பையில்) நீங்கள் செலுத்தும் இந்திரியத்தைக் கவனித்தீர்களா?**

**56:59. அதை நீங்கள் படைக்கிறீர்களா? அல்லது நாம் படைக்கின்றோமா?**

**56:60. உங்களுக்கிடையில் மரணத்தையும் நாமே ஏற்படுத்தியுள்ளோம் எனவே நம்மை எவரும் மிகைக்க முடியாது.**

**56:61. (அன்றியும் உங்களைப் போக்கி விட்டு) உங்கள் போன்றோரை பதிலாகக் கொண்டு வந்து நீங்கள் அறியாத உருவத்தில் உங்களை உண்டாக்கவும் (நாம் இயலாதவர்கள் அல்ல).**

**56:62. முதல் முறையாக (நாம் உங்களைப்) படைத்தது பற்றி நிச்சயமாக நீங்கள் அறிவீர்கள் - எனவே (அதிலிருந்து நினைவு கூர்ந்து) நீங்கள் உணர்வு பெற வேண்டாமா?**

இன்னும் இந்தவானம், பூமி, அண்டசராசரங்கள் இவற்றிலெல்லாம் காணாத அற்புதத்தையா இந்த காதின் வடிவமைப்பில் கண்டுவிட்டார்கள் மக்கள்?

# குழந்தைகளோடு பழகுவதில் முன்மாதிரி

நபி(ஸல்) அவர்கள் அனைத்துக் குழந்தைகளோடும் அன்போடு பழகுவார்கள் சிறுவர்களைச் சந்திக்கும் போது ஸலாம் கூறுவார்கள். அவர்களுடன் உரையாடுவார்கள். அவர்களுக்காக 'துஆ (பிரார்த்தனை) செய்வார்கள். சிறுவர்கள் உரிமையுடன் தன்னுடன் பழகுவதற்கு இடமளிப்பார்கள். இந்த உறவின் நெருக்கத்தின் காரணமாக தொழும் போது கூடக் குழந்தைகளைச் சுமந்து கொண்டு தொழுதுள்ளார்கள்.

● நபித்தோழர் அபூகதாதா அல்அன்ஸாரி(ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்:

குழந்தை உமாமா(ரழி) அவர்களைச் சுமந்து கொண்டு தொழுபவராக நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். (உமாமா நபியவர்களது பேத்தியாவார்கள். நபியவர்களின் மகள் ஸைனப் அவர்களது குழந்தையே உமாமாவாகும்.) ஸுஜூது(சாஷ்டாங்கம்) செய்யும் போது பிள்ளையைக் கீழே வைப்பார்கள். எழும் போது சுமந்து கொள்வார்கள். (புகாரி)

● நபி(ஸல்) அவர்கள் சிறுவர்-சிறுமியருடன் நெருக்கமாகவும், அன்பாகவும் பழகியதுடன் அவர்களுடன் விளையாடவும் செய்தார்கள். குழந்தைகளை முதுகில் ஏற்றிக் குதிரைச் சவாரி என தானே தவழ்ந்து அவர்களை மகிழ்விப்பார்கள். இதனால் பழக்கப்பட்ட நபிகளாரின் பேரர் ஹஸன் அல்லது ஹுஸைன் ஒரு முறை நபி(ஸல்) அவர்கள் தொழுகையில் ஸுஜூதில் இருக்கும் போதே அவர் சவாரிக்கத் தயாராகின்றார் என எண்ணி அவரின் முதுகில் ஏறிய சம்பவங்களும் உள்ளன.

● நபி(ஸல்) அவர்கள் ஒரு மாலை அல்லது இரவுத் தொழுகையின் போது நீண்ட நேரம் ஸுஜூது செய்தார்கள். தொழுகை முடிந்ததும் 'அல்லாஹ்வின் தூதரே! என்றுமில்லாதவாறு நீண்ட நேரம் ஸுஜூது செய்தீர்கள். உங்களுக்கு வஹீ வருகின்றதோ! என நாம் நினைத்தோம். அல்லது ஏதோ நடந்து விட்டதோ! என எண்ணினோம் எனக் காரணங்களைக் கூறினர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'அப்படி ஒன்றுமில்லை. எனது பேரன் என் முதுகில் ஏறி விட்டார். அவர் தானாக இறங்கும் வரை நானாக எழுந்து அவருக்கு அதிர்ச்சியூட்டுவதை நான் வெறுத்தேன்' (எனவேதான் தாமதித்தேன்) எனக் கூறினார்கள். (ஹதீஸின் சுருக்கம் – நஸாஈ, அஹ்மத்)

இந்த ஹதீஸ், நபி(ஸல்) அவர்கள் குழந்தைகளின் உணர்வுக்கு எவ்வளவு முன்னுரிமை கொடுத்து அவர்களோடு எவ்வளவு நெருக்கமான உறவை வைத்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அத்துடன் நபி(ஸல்) அவர்கள் குழந்தைகளுடன் பழகும் போது தானும் ஒரு குழந்தையாக மாறி, அவர்களுடன் விளையாடி இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றது

**இன்றைய செய்திகளும் இஸ்லாத்தின் நிலைப்பாடும்**

**அரசு வேலைகளில் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை: மராட்டிய மாநில அரசு அறிவிப்பு : மாலைமலர் செய்தி பிப்ரவரி 27, 2015**

**இஸ்லாத்தின் நிலைப்பாடு:**

# இடஒதுக்கீட்டுக்கு இடம்கொடாது இஸ்லாம்!

தற்காலிகமாக நாட்டின் பின்தங்கிய சமூகம் என்ற அடிப்படையில் முஸ்லிம்களுக்கு வேலைவாய்ப்புகளில் வழங்கப்பட்டாலும் பொதுவாக இஸ்லாத்திற்கு ஏற்புடையதல்ல இடஒதுக்கீடு என்பது!

இஸ்லாம் என்பது உலகெங்கும் வெகு வேகமாக பரவிவரும் ஒரு வாழ்வியல் கொள்கை. இதை ஏற்றவர்களுக்குப் பெயர்தான் முஸ்லிம்கள். இதை யாரும் ஏற்றுக்கொண்டு அதன்படி வாழலாம். இதை ஏற்பவர்களின் விகிதம் பெருகப்பெருக இடஒதுக்கீடு என்பதே அர்த்தமற்றதாக மாறி விடும்.

இரண்டு காரணங்களுக்காக இட ஒதுக்கீடு என்பது இஸ்லாத்திற்குப் பொருத்தமற்ற ஒன்றாகும்.

முதலாவதாக இது ஒரு வாழ்வியல் கொள்கை. அதாவது ஒன்றே மனிதகுலம், ஒருவனே இறைவன் என்பதையும் இவ்வுலக வாழ்வுக்குப் பின் மறுமை வாழ்வு உள்ளது, சொர்க்கமும் நரகமும் உண்டு என்ற உண்மைகளில் நம்பிக்கை கொண்டு அந்த இறைவன் வகுத்து வழங்கும் வாழ்க்கைத் திட்டத்தை ஏற்று வாழுதலுக்கே இஸ்லாம் என்று கூறப்படும். இதை ஒருவர் ஏற்று வாழ ஆரம்பித்தால் அவர் முஸ்லிம் ஆகிவிடுகிறார். மாறாக முஸ்லிம் என்ற பட்டம் பிறப்பின் அடிப்படையில் வருவதல்ல. மாறாக நம்பிக்கை மற்றும் செயல்பாட்டின் அடிப்படையில் வருவது அது! உதாரணமாக கம்யுனிஸ்டுகளுக்கு அல்லது திராவிடக் கழகத்தினருக்கு இட ஒதுக்கீடு என்பது எப்படி பொருத்தமற்றதோ அதேபோலத்தான் இதுவம்.

## இஸ்லாத்தின் வளர்ச்சி

இன்று உலக மக்கள்தொகையில் கால்வாசிக்கும் அதிகமான மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்த மார்க்கம் தொடர்ந்து வெகுவேகமாக பரவிவருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை! மற்ற சமூகங்களோடு ஒப்பிடும்போது இஸ்லாமியர்களின் எண்ணிக்கை இரண்டு வழிகளில் பெருகுகிறது. இயற்கையான இனப்பெருக்கம் மூலமும் இதை ஏற்பவர்களின் வரவு மூலமும்.

இஸ்லாத்தில் திருமணம் மற்றும் குழந்தை பிறப்பு, குழந்தை பராமரிப்பு, குடும்ப உறவுகள் போன்றவை இயற்கையான ரீதியில் ஊக்குவிக்கப் படுவதால் இஸ்லாமியர்களின் மக்கள்தொகைப் பெருக்கமும் இயற்கையாகவே இருந்துவருகின்றது. ஆனால் இஸ்லாமியர் அல்லாத மக்களிடையே இன்று திருமணங்கள் நடப்பது அப்பூர்வமாகி வருவது

கண்கூடு. திருமணம் இல்லாமலேயே ஆணும் பெண்ணும் இணைந்து வாழுதல், திருமண வயதை தள்ளிப் போடுதல், வரதட்சணை போன்ற காரணங்களுக்காக முதிர்கன்னிகள் தேங்குதல் போன்ற நடைமுறைகள் இன்னும் திருத்தப் படாமல் தொடர்கின்றன. அப்படியே திருமணம் நடந்து குழந்தைகள் பிறந்தாலும் கருக்கொலை, பெண்சிசுக்கொலை, குடும்பக்கட்டுப்பாடு போன்ற காரணங்களால் அவை அழிக்கப்படுகின்றன அல்லது கட்டுப்படுத்தப் படுகின்றன. இஸ்லாமியர்களை ஒப்பிடும்போது அவர்களிடையே இனப்பெருக்கம் குறைந்துள்ளது. ஒரு இனம் அபிவிருத்தியாக வேண்டும் என்றால் அங்கு குறைந்த பட்ச இனப்பெருக்க விகிதம் 2.1 இருக்க வேண்டும். ஆனால் இன்று ஐரோப்பிய நாடுகளில் இவ்விகிதம் 1.3 இலிருந்து 1.9 வரையிலும் சிங்கப்பூர், ஜப்பான் தாய்வான் போன்ற நாடுகளில் 0.8 முதல் 1.4 வரையிலும் உள்ளன (இந்தியாவில் சராசரி இனப்பெருக்க விகிதம் 2.51 என்று உள்ளது. இதில் அனைத்து சமூகங்களும் உட்படும்)

இன்று சராசரி உலக மக்கள்தொகை வளர்ச்சி 2.3% விகிதத்தில் உள்ளது. ஆனால் இஸ்லாத்தின் வளர்ச்சியோ 2.9% விகிதத்தில் உள்ளது

ஆக, இஸ்லாமியர்களின் மக்கள்தொகை என்பது இயற்கையாகவே பெருகி வருவதோடு அனுதினமும் இம்மார்க்கத்தில் இணைபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகி வருவதால் உலகில் முஸ்லிம்களின் எண்ணிக்கை விகிதாச்சாரம் என்பது நிலையான ஒன்றல்ல.

அகில உலக மக்களுக்கும் அருட்கொடையாக இறக்கப்பட்டது இஸ்லாம். இதன் வளர்ச்சி முழுமையடையும். அன்று உலகோர் அனைவரும் இந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்ட நிலை வரும் என்கிறான் தனது திருமறையில்:

**“தம் வாய்களைக் கொண்டே இறைவனின் ஒளியை (ஊதி) அணைத்து விட அவர்கள் விரும்புகின்றார்கள் – ஆனால் இறைமறுப்பாளர்கள் வெறுத்த போதிலும் இறைவனின் தன் ஒளியை பூர்த்தியாக்கி வைக்காமல் இருக்க மாட்டான்.“ (அல்-குர்ஆன் 9:32)**

அன்று இடஒதுக்கீடு என்ற வார்த்தைக்கே இடம் இருக்காது!

---

# சிறந்த தலைமுறைகளை உருவாக்கும் பிரார்த்தனைகள்

நாம் அனைவரும் திருமணத்திற்கு முன்னும், பின்னும் இந்த பிரார்த்தனையை அதிகமாக கேட்க வேண்டும்....

“எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக (வழிகாட்டியாக) ஆக்கியருள்வாயாக” என்று பிரார்த்தனை செய்வார்கள். (திருக்குர்ஆன் 25 :74)

**இன்றைய செய்திகளும் இஸ்லாத்தின் நிலைப்பாடும்**

நாடு முழுவதும் பசுவதை தடை சட்டம் : பாரதிய ஜனதா வலியுறுத்தல்

**தமிழ் முரசு 2015 மார்ச் 16**

புதுடெல்லி: பாஜ ஆளும் மாநிலமான மகாராஷ்டிராவில் பசுவதை தடை சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாடு முழுவதும் பசுவதை தடை சட்டம் கொண்டுவர வேண்டும் என மத்திய அரசை பாஜ வலியுறுத்தி உள்ளது.இறைச்சிக்காக மாடுகள் கொல்லப்படுவதை தடுக்கப்படும் வகையில் பசுவதை தடை சட்டத்தை அமல்படுத்த வேண்டும் என பாஜ நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வருகிறது.

**இஸ்லாத்தின் நிலைப்பாடு**

# உணவுக்காக உயிர்களைக் கொல்வது பாவமா?

இக்கேள்விக்கு பதில் காண்பதற்கு முன்னால் நாம் பாவம் எது, புண்ணியம் எது என்பதை தீர்மானிக்க ஒரு அளவுகோலைக் கண்டறியக் கடமைப் பட்டுள்ளோம். மனிதனின் குறுகிய அறிவு கொண்டோ பெரும்பான்மை மக்களின் வாக்கெடுப்பு மூலமாகவோ முன்னோர்களின் பழக்கவழக்கங்களின் அடிப்படையிலோ அந்த அளவுகோலை நிர்ணயிக்க முடியாது. ஆனால் இவ்வுலகின் உரிமையாளனும் அனைத்து படைப்பினங்களையும் அதிபக்குவமாக அறிந்தவனும் முக்காலத்தையும் உணரக்கூடியவனும் ஆகிய அந்த இறைவனுக்கு மட்டுமே அந்த அளவுகோலைத் தர முடியும். மேலும் நாளை இறுதித் தீர்ப்புநாளின் போது நம் பாவபுண்ணியங்களை விசாரித்து அதன் அடிப்படையில் நமக்கு சொர்கத்தையோ நரகத்தையோ வழங்க இருப்பவனும் அவனே. எனவே அவன் எதைச் செய் என்று ஏவுகிறானோ அதுவே புண்ணியம் எதைச் செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம் என்பதை நாம் அறியவேண்டும்.

## இறைவனின் பார்வையில் இது பாவமல்ல!

அந்த அடிப்படையில் உணவுக்காக விலங்குகளைக் கொல்வது பாவமல்ல என்று இறைவேதங்கள் மூலம் உணரலாம். குறிப்பாக இறுதி இறைவேதம் திருக்குர்ஆனில் இறைவன் கூறுகிறான்:

“இறைவிசுவாசிகளே! (நீங்கள் செய்து கொண்ட) உடன்படிக்கைகளை (முழுமையாக நிறைவேற்றுங்கள். உங்கள் மீது ஓதிக்காட்டி இருப்பவைத் தவிர மற்றைய நாற்கால் பிராணிகள் உங்களுக்கு (உணவிற்காக) ஆகுமாக்கப் பட்டுள்ளன” (திருக்குர்ஆன் 5:1)

‘‘கால்நடைகளையும் அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்குக் கத கதப்பு(ள்ள ஆடையணிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கின்றீர்கள்.‘‘ (திருக்குர்ஆன் 16:5)

“நிச்சயமாக உங்களுக்கு பிராணிகளில் ஒரு படிப்பினை இருக்கிறது. அவற்றின் வயிறுகளிலிருந்து (சுரக்கும் பாலை) நாம் உங்களுக்குப் புகட்டுகிறோம். இன்னும் அவற்றில் உங்களுக்கு அநேக பயன்கள் இருக்கின்றன. அவற்றி(ன் மாமிசத்தி)லிருந்து நீங்கள் புசிக்கிறீர்கள்.“ ழூ (திருக்குர்ஆன் 23:21)

## மனுசாஸ்திரம் புலால் பற்றி...

ஒரு காலத்திலும் புலால் உண்பதை இறைவன் தடுத்ததாக எங்கும் நீங்கள் காண முடியாது. உண்மையில் இந்து மதத்தின் சட்ட நூலாகக் கருதப்படும் மனுசாஸ்திரம் இவ்வாறு கூறுகிறது

“உணவு உட்கொள்பவர் – மாமிச உணவு உட்கொள்வாராயின் – அவர் உண்ணும் மாமிச உணவு அவருக்கு எந்த கெடுதியும் அளிப்பதில்லை. எந்நாளும் மாமிச உணவை உட்கொண்டாலும் சரியே. ஏனெனில் சில படைப்புகளை உண்பதற்காகவும் – சில படைப்புகளை உண்ணப்படுவதற்காகவும் படைத்தவன் கடவுளே“. (ஐந்தாவது அத்தியாயம் முப்பதாவது வசனம்)

“மாமிச உணவு உண்பதும் – சரியான தியாகமே. இது மரபு ரீதியாக அறியப்பட்டு வரும் கடவுளின் கட்டளையாகும்“. (5:39)

“பலியிடுவதற்கென கடவுள் சில கால்நடைகளை படைத்திருக்கின்றான். எனவே பலியிடுவதற்காக கால்நடைகளை அறுப்பது என்பது – கால்நடைகளை கொல்வது ஆகாது.“(5:40)

## அறுபடும்போது துடிக்கின்றனவே?

ஆக, இறைவனின் பார்வையில் இது பாவமல்ல என்பதை அறிகிறோம். இருந்தாலும் உயிரினங்கள் அறுபடும்போதும் துடிக்கும்போதும் நம்மால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லையே! ஆம், இறைவன் இதை வாழ்க்கை என்ற பரீட்சையில் ஒரு சோதனையாக அமைத்துள்ளான். அப்போது ஏற்படும் நம் உள்ளத்தில் ஏற்படும் இரக்க உணர்வுக்கும் நமக்கு கூலி வழங்கப் படுகிறது என்கிறார்கள் நபிகளார். அந்த இரக்க உணர்வை நம் உள்ளத்தில் விதைத்த அந்தக் கருணையாளனே உணவுக்காக கால்நடைகளைக் கொல்ல அனுமதிக்கவும் செய்துள்ளான், அதை பலி என்ற முறையில் நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையாகவும் ஆக்கியுள்ளான்.

## கொல்வதும் ஓர் கடமை

நமது அற்ப அறிவுக்கு ஒருவேளை இது பாவமாகத் தோன்றி கால்நடைகளைக் கொல்லாமல் விட்டுவிட்டால் அந்த விலங்கினத்துக்கு எதிராகச் செய்யும் அநீதியாகவும் அமைந்துவிடும். உதாரணமாக, ஒரு ஏழை விவசாயி தன் வயதான மாட்டை விற்றால்தான் வேறு காளையை வாங்கமுடியும். தன் தொழிலைத் தொடரவும் முடியும். அதை விற்கச் சந்தைக்குக் கொண்டு வருகிறார். ஒரு இறைச்சிக்கடைக் காரர் வாங்கவும் தயாராக உள்ளார். அப்போது .’பசுவதைத் தடைச் சட்டம் என்ற பெயரில் இதை நாம் தடுத்தால் என்ன நடக்கும்? அந்த ஏழை விவசாயியின்

பிழைப்பில் அநியாயமாக மண்ணைப் போடுகிறோம். அவருக்கே உணவுக்கு திண்டாட்டமாக இருக்கும்போது அந்த மாட்டுக்கு அவரால் உணவளிக்க முடியுமா? அவர் அதைப் பராமரிக்க முடியாத நிலையில் கட்டவிழ்த்து விட்டால் அடுத்தவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இரையாகிறார். வேறுவழியின்றி கட்டிப்போட்டால் அது பசியால் துடிதுடித்து படிப்படியாக இறக்கிறது. இதுதான் மனிதாபிமானமா?....... இவ்வாறு ஒன்றுக்குப் பின் ஒன்றாக தொடர் விபரீதங்களுக்கு நாம் காரணமாகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த அனைத்து அநீதிகளுக்கும் பாவங்களுக்கும் மறுமையில் இறைவனின தண்டனையும் கிடைக்கும். அது நரக நெருப்பல்லாமல் வேறு என்ன?

## சட்டம் இயற்றும் அதிகாரம் நம்மிடம் இல்லை!

இயற்கையில் செடிகொடிகள் புல்பூண்டு முதல் வளர்வன அனைத்தும் உயிரினங்களே. பலவீனமான உயிரினங்களை பலமான உயிரினங்களுக்கு உணவாக இறைவன் படைத்திருக்கிறான் என்பதை சற்று சிந்தித்தாலே அறியலாம். இந்த ஏற்பாட்டின் சூட்சுமம் அவன் மட்டுமே அறிவான். புலியிடம் ‘இன்று முதல் நீ புல்லை மட்டும்தான் உண்ணவேண்டும்!’ மானிடம் ‘நீ நீரை மட்டுமே அருந்தி உயிர் வாழ்!’ என்றோ கட்டளையிட நமக்கு அதிகாரமில்லை என்பதை அறிவோம். நம் அற்ப அறிவின் அடிப்படையில் இதில் தலையிட்டு மாற்றங்கள் செய்ய நினைத்தால் பல விபரீதங்கள் ஏற்படும்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

***2:216.** **.ஒன்றை நீங்கள் வெறுக்கலாம். அது உங்களுக்கு நன்மையானதாக இருக்கும். ஒன்றை நீங்கள் விரும்பலாம். அது உங்களுக்குக் கெட்டதாக இருக்கும். அல்லாஹ்வே அறிவான். நீங்கள் அறியமாட்டீர்கள்.**

# குழந்தைகளிடம் சமத்துவம்

நபி(ஸல்) அவர்களின் அடிமையாக இருந்த ஸைத்(ரழி) அவர்களது மகன் உஸாமா(ரழி) அவர்கள் பார்ப்பதற்குக் கண்ணங்-கரேர் என்று இருப்பார். இவருடைய தாயார் ஒரு ‘நீக்றோ’ அடிமையாவார்கள். பொதுவாக மக்கள் அழகான பிள்ளைகள் மீதுதான் அன்பைச் சொரிவர், அள்ளி அணைப்பர். ஆனால் நபி(ஸல்) அவர்கள் பார்க்கப் பிடிக்காத பிள்ளைகளுடனும் பாசத்தைப் பொழிந்து பழகுவார்கள். இந்த உஸாமா(ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி(ஸல்) அவர்கள் என்னைத் தூக்கி அவர்களது ஒரு தொடை மீதும், அவர்களது பேரன் ஹஸன்(ரழி) அவர்களை ஒரு மடியிலும் அமர்த்தி, எம்மிருவரையும் அணைத்துக் கொண்டு... ‘யா அல்லாஹ்! இவ்விருவர் மீதும் நீ கருணை காட்டுவாயாக! நானும் இவ்விருவர் மீதும் அன்பு காட்டுகின்றேன்’ எனப் பிரார்த்தித்தார்கள். (புகாரி)

# எதிரிகளின் குழந்தைகளின் நலன் நாடிய உத்தமர்

மனிதன் சக மனிதனுக்கு எதிரியல்ல, மாறாக ஷைத்தான் என்ற மனிதகுல விரோதியே மனிதர்களை மற்ற மனிதர்களுக்கு எதிரியாக முன்வைக்கிறான், பகைமையை மூட்டுகிறான் என்பது இஸ்லாம் போதிக்கும் அடிப்படை கல்வியாகும்.

நபி(ஸல்) அவர்கள் தமது எதிரிகளின் குழந்தைகளின் எதிர்கால முன்னேற்றத்திற்காகக் கூடப் பிரார்த்தனை செய்துள்ளார்கள். இது அனைத்து மனித குலத்தின் எதிர்கால சந்ததிகளின் சீர்திருத்தத்திற்கும் அவர்கள் வழங்கிய முக்கியத்துவத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

நபி(ஸல்) அவர்கள் தாயிஃப் நகருக்கு சத்தியப் பிரச்சாரத்திற்காகச் சென்றார்கள். அங்கு மக்களிடம் மூடநம்பிக்கைகளைக் கைவிட்டு படைத்த இறைவனை வணங்கி வாழ அழைத்தார்கள். இறைவனின் பெயரால் மக்களை ஏய்த்துப்பிழைத்துவந்த இடைத்தரகர்களும் ஆதிக்க வர்க்கமும் மக்களை நபிகளாருக்கு எதிராகத் திருப்பிவிட்டார்கள். முன்னோர்கள் கற்பித்த மூடநம்பிக்கைகளில் ஊறிப் போயிருந்த அம்மக்களும் நபி(ஸல்) அவர்களைத் துரத்தித் துரத்தித் தாக்கினர். நபி(ஸல்) அவர்களின் பொன்னான மேனியில் ஏற்பட்ட காயங்களிலிருந்து வடிந்த இரத்தத்தால் அவர்களின் பாதணிகள் தோய்ந்து போகும் அளவுக்குத் தாக்கப்பட்டார்கள்.

அப்போது அவர்கள் செய்த பிரார்த்தனை உருக்கமானதாகும். அப்போது இறைவன் நபியவர்கள் விரும்பினால் அந்த மக்களை அழித்து விடலாம் என்பதற்காக அந்த மலைக்குப் பொறுப்பாளியான வானவரை நபிகளார்பால் அனுப்பினான்.

எனினும் நபி(ஸல்) அவர்கள் அம்மக்களை அழிக்க விரும்பவில்லை. மாறாக 'இவர்கள் சத்தியத்தை ஏற்காவிட்டாலும் இவர்களின் சந்ததிகளில் இறைவனுக்கு எதையும் இணையாக்காமல் அவன் ஒருவனை மட்டும் வணங்குபவர்கள் உருவாக வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன்' எனக் கூறினார்கள்.

நபிகளாரின் நிலையை சற்று கற்பனை செய்து பார்க்க வேண்டும். எந்த ஒரு சராசரி மனிதனும் தன்னை தாக்கி அழிக்க வரும் ஒரு கூட்டத்தை திருப்பி அடிக்கவோ அழிக்கவோ வாய்ப்பு கிடைத்தால் அதைத்தான் விரும்புவான். ஆனால் நபிகளார் அந்த வாய்ப்பை அப்பட்டமாக மறுத்ததோடு மட்டுமல்லாமல் அதே மக்களின் சந்ததிகளை நினைத்துப் பார்க்கிறார்கள்! இவர்கள் இன்று சத்தியத்தை ஏற்காவிட்டாலும் இவர்களின் எதிர்கால சந்ததியினர் சத்தியத்தை ஏற்பவர்களாக மாறவேண்டும் என்று

ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்காக உருக்கமாகப் பிரார்த்திக்கிறார்கள். தன் வலிகளை மறக்கிறார்கள்!

ஆம், இந்த மனிதகுல மாணிக்கத்திடம் மனிதகுலம் பெறவேண்டிய பாடம் இதுதான்... மனிதர்களைக் கொன்றோதுக்கிவிட்டு அவர்களின் சமாதிகளின் மேல் நிலைநாட்டப் படுவதல்ல தர்மம் என்பது. மாறாக மக்களை சீர்திருத்தி அவர்களின் கரங்களைக் கொண்டே அதர்மத்தை அகற்றி அங்கு நிலைநாட்டப் படுவதே தர்மம்! இஸ்லாம் என்ற சுயசீர்திருத்தக் கொள்கையை ஏற்றவர்கள் இந்த அடிப்படையில்தான் செயல்பட வேண்டும்!

# கற்பனையல்ல .... நிஜம்!

**'பலாத்காரத்தின் போது அமைதியாக இருந்திருந்தால் டெல்லி மாணவி செத்திருக்க மாட்டாள்' - சிறைக்குள் குற்றம்சாட்டப்பட்டவர் பேட்டி**

**மாலைமலர் செய்தி - நாள்: மார்ச் 03**

கடந்த 2012-ம் ஆண்டு டிசம்பர் 16-ம் தேதி இரவு டெல்லியில் தனது நண்பருடன் திரைப்படம் பார்த்துவிட்டு வீடு திரும்பும் வழியில் ஓடும் பேருந்தில் வைத்து ஒரு குடிகார கும்பல் அவரை கற்பழித்ததுடன் கொடூரமாக தாக்கி சாலையோரம் வீசியது. நாடெங்கும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை மையப்படுத்தி இங்கிலாந்தின் லெஸ்லி உட்வின் என்பவர் ஆவணப்படம் தயாரித்துள்ளார். 'இந்தியாவின் மகள்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆவணப்படத்தில் பல்வேறு தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கில் கைதான பஸ் டிரைவர் முகேஷ் சிங் சிறையில் இருந்தபடியே இந்த ஆவணப்படத்திற்காக பேட்டி கொடுத்தபோது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

(இந்த சம்பவத்தின் பின்னர் திருக்குர்ஆன் நற்செய்தி மலர் - பிப்ரவரி 2013 இதழில் "குற்றவாளிகள் யார்? - கழுகுப்படை ஆய்வு" என்ற தலைப்பில் ஒரு கற்பனைப் புலனாய்வு தொகுப்பு இடம்பெற்றிருந்தது. அதன் ஒரு பகுதியை வாசகர்களின் பார்வைக்காக முன்வைக்கிறோம்)

குறிப்பு: இறைவன் வகுத்து வழங்கும் மிக நேர்த்தியான அதிபக்குவமான உறுதிமிக்க வாழ்வியல் சட்டங்களைப் புறக்கணித்துவிட்டு மனிதர்கள் மனம்போன போக்கில் உண்டாக்கிய சட்டங்களை நாடு பின்பற்றும் வரையில் மக்களுக்கு உண்மையான நீதி கிடைப்பது என்பது சாத்தியமில்லை, சட்டம் ஒழுங்கு என்பது அர்த்தமற்றதாகவே தொடரும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

# குற்றவாளிகள் யார்? - கழுகுப்படை ஆய்வு!

அண்மையில் நடந்த பாலியல் பலாத்கார சம்பவத்தைத் தொடர்ந்து பற்பல அலைகள் நாட்டில் எழுந்துள்ளதை நாம் அனைவரும் கண்டு வருகிறோம். ஒவ்வொருவரும் தனக்கு எது குற்றமாகத் தெரிகிறதோ அதைச் செய்தவர்களை அல்லது அதற்குக் காரணமாக இருப்பவற்றை நோக்கி விரல் நீட்டுகிறார்கள், வசை பாடுகிறார்கள். இவர்களில் யார் சரி? யார் தவறு? என்பது இன்னும் முடிவு செய்யப் படாமல் தொடர்கிறது.

உண்மை அறிய எங்கள் கழுகுப்படை அந்த சம்பவம் நடக்கப் போவது அறிந்து உடனே களத்தில் இறங்கியது. அடடா.... அந்த பஸ்ஸை நெருங்குவதற்குள் அந்த சம்பவம் நடந்துவிட்டிருந்தது.

அந்த சம்பவத்தை நிகழ்த்திய அந்த அறுவரையும் பேட்டி கண்டாம்..

'ஏன் நீங்கள் இதைச் செய்தீர்கள்?'

கேள்வியைக் கேட்டதுதான் தாமதம். பதில்கள் சரமாரியாக வந்து விழுந்தன.

- நாங்கள் இளைஞர்கள். எங்களுக்கு எங்கள் உணர்வுகளைத் தீர்க்க வேண்டும் என்று தோன்றியது. அதற்கான சூழ்நிலை அமைந்து வந்ததால் அவ்வாறு செய்தோம்.
- பெண் என்பவள் ஆணின் இச்சையைத் தீர்க்கத்தானே படைக்கப் பட்டிருக்கிறாள். அவளாகவே இணங்கியிருந்தா விபரீதமான ஏதும் நிகழ்ந்திருக்காது.
- அந்தப் பெண்ணின் ஆடை எங்களைத் தூண்டியது. அவ்வளவு செக்ஸியாவா டிரெஸ் உடுத்துவது. அதுவே எங்களை அழைப்பது போல இருந்துச்சு . அழைப்பை ஏற்றது தப்பா சார்?
- அவள் வேறு ஒரு பையன்கூட கொஞ்சும்போது எங்களுக்கும் இணங்கினா என்ன தப்பு சார்?
- டேக் இட் ஈசி சார், இது என்ன நாட்டில நடக்காத ஒண்ணா? ஒவ்வொரு வீட்டிலும் நடக்கிறதுதானே!
- நாட்டில பரவலா சினிமாவிலும் டிவியிலும் பூங்காக்களிலும் பொது இடங்களிலும் தினமும் 'டெமோ' செய்து காட்டுகிறாங்களே அதையெல்லாம் பார்த்துட்டு சும்மா இருக்க முடியுமா? என்ன கேள்வி சார் இது?
- சின்ன வயசுலே இருந்து தேக்கி வெச்ச ஆசைகளை பின்னே எப்போதுதான் நிறைவேற்றுவது?

நாம் அடுத்த கேள்வியைக் கேட்டோம்.

'ஏம்பா, ஏன் அடுத்தவன் பெண்ணை நாடுகிறீர்கள்? இந்த வயதில் திருமணம் செய்து விட்டு அமைதியாக அனுபவித்து விட்டுப் போகவேண்டியதுதானே!"

அதற்கும் முண்டியடித்துக் கொண்டு பதில் சொன்னார்கள் அவர்கள்.

- இந்த விலைவாசியில் கல்யாணமா? யோசிக்கவே முடியாதே!
- பொண்ணுக எல்லாம் வேலைக்குப் போறாங்க. படிப்பு ஜாஸ்த்தி. திமிர்

ஜாஸ்த்தி. அவங்களுக்கு அடங்கி நடக்க முடியுமா?

● கல்யாணம் பண்ணினால் இந்தக் காலத்திலே அவங்க விசுவாசமா நடப்பங்களா? யாருடைய பிள்ளைக்கோ நான் தந்தையாகணுமா?

● எனக்கு ஆசைதான். எங்க அம்மா அப்பா பண்ணி வைக்கலேன்னா வேறு என்ன சார் வழி?

● எங்க அக்காவுக்கு இன்னும் கலியாணம் ஆகல. அவளுக்கு ஆகணும்னா வரதட்சணைக்கு ஒரு லட்சமாவது வேணும். எங்கே போக?

● எனக்கு ரொம்பநாளா பொண்ணு தேடறாங்க. இப்பெல்லாம் பொண்ணு கிடைக்கறதே ரொம்ப கஷ்டம், அப்படியே கிடைத்தாலும் ஏன் படிப்பு இல்லாட்டி வருமானம் அவங்களுக்கு பத்தமாட்டேங்குது.

● பொண்ணுகளும் எதுக்கு கல்யாணம்னு சொல்லி அலையறாங்க. கல்யாணம் பண்ணினா குழந்தை குட்டின்னு வரும், எதுக்கு ரிஸ்க்? இப்படியே பாய் பிரேண்டோட சுத்திகிட்டே இருந்தாப் போதும்னு நினைக்கறாங்க!

நம் அடுத்த கேள்வி:

உங்களுக்கும் அக்கா, தங்கச்சி எல்லாம் இருக்காங்களே, அவங்க நினைப்பெல்லாம் வரவில்லையா?

● எனக்கு அக்கா தங்கை யாரும் கிடையாது

● எங்க அக்காவுக்கு எப்பவோ கல்யாணம் ஆகி மச்சானோடு இருக்காங்க.

● மத்த பொண்ணுகளைப் பார்க்கும்போது அவங்க நினைப்பெல்லாம் வராது.

நீங்கள் செய்த இந்தக் குற்றத்துக்கு பயங்கரமான தண்டனை காத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா?

● என்ன பெரிய தண்டனை சார்? மீறி மீறி போனா ஜெயில்லே தானே போடுவாங்க. எல்லோரும் போயிட்டும் வந்துட்டும்தானே இருக்காங்க!

● எங்களை விட பெரிய தப்பு செய்பவனெல்லாம் வெளிலேதானே இருக்காங்க? நாட்டையே ஆண்டுகிட்டு வர்றாங்க.

● உள்ளே போனா பட்டினி ஏதும் போட மாட்டங்கதானே! வெளிலே கஷ்டப் பட்றதுக்கு உள்ளேயே இருந்துட்டு வரலாம்.

● உள்ளே போனாதான் என்ன? எங்கப்பா காசு கொடுத்து வெளிலே கொண்டு வந்து விடுவாங்க!

● நல்ல ஒரு வக்கீல வெச்சா கேஸ் இல்லாம செய்திடலாம்!

● நம்ம இந்தியாலே எது சார் முடியாது?

● கொஞ்ச நாள் தலை மறைவாகி விட்டால் எங்களைப் பிடிக்க முடியாது.

பலவாறு வந்தன பதில்கள். சொல்லித் தீரவில்லை அவர்களுக்கு!

(இதன் தொடர்ச்சியைப் படிக்க விரும்புவோர் http://quranmalar.blogspot.in/2013/01 என்ற இணைய இணைப்பை நாடலாம்)

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

- இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.
- மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.
- முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

- ஓராண்டு சந்தா : Rs. 60-
- ஈராண்டு சந்தா Rs.120-

Published from:

**House of Peace,**

PO Box no. 1726,

No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,

Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

## நன்மையில் இணைவீர்..! இறைபொருத்தம் நாடி...!

திருக்குர்ஆன் நற்செய்தி மலர் திருக்குர்ஆன் மற்றும் இறுதித் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் சத்திய போதனைகளில் அடங்கியுள்ள செய்திகளை தூய தமிழில் அனைத்து தமிழ் கூறும் நல்லுலகும் அறிந்து கொண்டு தங்கள் வாழ்க்கையில் திருத்தங்கள் மேற்கொண்டு இறைவனின் பொருத்தத்தொடு வாழவேண்டும் என்ற நோக்கோடு செயல்பட்டு வருவதை அறிவீர்கள். பெரும்பாலான வாசகர்களுக்கு – குறிப்பாக பிறமத அன்பர்களுக்கு –இவ்விதழ் அன்பளிப்பாகவே அனுப்பபட்டு வருகிறது. இந்த சேவையில் இறைபொருத்தம் நாடி தங்களை இணைத்துக் கொள்ள விரும்புவோர் தங்களாலான பொருளாதார உதவியை எங்கள் நிறுவனத்திற்கு செய்யலாம். எங்கள் வங்கிக் கணக்கு விவரம் (Bank Account details):

Name: House of Peace

Bank: ICICI Bank, Indra nagar Branch Bangalore

Account No 016901013432 IFScode: ICIC0000169

Printed, published & edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, published from House of Peace, #8, 4th Main, 2nd cross, LB Sastry Nagar, Bangalore 560017 and printed at Print-O-Graph, Balaji complex, Sultanpet, Bangalore.

Registered News paper in India No.KARTAM/2007/28173

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNE/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, MYSORE ROAD, BANGALORE 560026 on 25th or 26th or 27th of every month. No of pages: 24+4.
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதிலும் இரவும், பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும் மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும் வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமியை இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும் அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும் வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் - சிந்தித்துணரும் மக்களுக்கு (அல்லாஹ்வுடைய வல்லமையையும், கருணையையும் எடுத்துக் காட்டும்) சான்றுகள் உள்ளன.
(திருக்குர்ஆன் 2:164)

(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)